# ரூ.240.54 கோடி செலவில் உலகத் தரத்தில் சென்னையில் - கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!



சென்னை, ஜூன் 17-

**சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.240.54 கோடி செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.6. 2023) சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், தரை தளம் மற்றும் 6 தளங்களுடன் மொத்தம் 6 லட்சம் சதுரஅடி பரப்பளவில், 1000 படுக்கைகளுடன் 240.54 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் இணைந்து திறந்து வைத்தார். மேலும், சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

### 1000 படுக்கை வசதிகள்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 3.6.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், "சென்னை பெருநகரத்தில் உள்ள கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுவதற்காக சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் சுமார் 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, மருத்துவமனைக்கு கட்டடம் கட்டுவதற்காக முதற்கட்டமாக 230 கோடி ரூபாய் நிதியும், பின்னர் கூடுதலாக 10 கோடியே 54 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை கட்டும் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் 21.3.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்த 1000 படுக்கை வசதிகள் கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், இருதயவியல் துறை, இருதய அறுவை சிகிச்சை துறை, நரம்பியல் துறை, நரம்பியல் அறுவை சிகிச்சை துறை, புற்றுநோய் மருத்துவத் துறை, புற்றுநோய் அறுவை சிகிச்சை துறை, குடல் இரைப்பை மருத்துவத் துறை, குடல் இரைப்பை அறுவை சிகிச்சை துறை, சிறுநீரக அறுவை சிகிச்சை துறை, சிறுநீரக மருத்துவத் துறை, இரத்தநாள அறுவை சிகிச்சை துறை, மூளை இரத்தநாள கதிரியல் துறை ஆகிய உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கான வசதிகளை கொண்டுள்ளது.

### நவீன அறுவை அரங்குகள்!

மேலும், அவசர சிகிச்சை பிரிவு, மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை, மத்திய ஆய்வகம், இரத்த வங்கி, கதிரியல் துறை (CT, MRI, USG, Digital xray), இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வியல் துறை ஆகிய சிறப்புத் துறைகளையும், இருதய கேத்லேப் பிரிவு, மூளை இரத்தநாள கேத்லேப் பிரிவு, தீவிர இருதய சிகிச்சை பிரிவு, தீவிர மயக்கவியல் பிரிவு, 15 நவீன அறுவை அரங்குகள் ஆகிய வசதிகளையும் கொண்டுள்ளது.

இந்த உயர்சிறப்பு மருத்துவமனையில், 146.52 கோடி செலவில், பல்வேறு நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனையின் செயல்பாட்டிற்காக மருத்துவர்கள், செவிலியர்கள், பிற துணை மருத்துவ ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் உட்பட 1000 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் நவீன வசதிகளுடைய தனி அறைகள், மத்திய நுண்கிருமி நீக்கு நிலையம், நவீன சலவையகம், மத்திய மருந்தகம், மத்திய ஆய்வகம், மருத்துவப் பதிவேடுகள் துறை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், சிற்றுண்டியகம், தகவல் மையம், 24 மணி நேர தூய்மைப் பணி மற்றும் பாதுகாப்பு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, உதவி மையம், காத்திருப்பு அறை, மருத்துவக் கழிவு பராமரிப்பு, ஆக்ஸிஜன் குழாய் அமைப்பு, தரக்கட்டுப்பாட்டு துறை, மத்திய சேமிப்பு கிடங்கு, ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை ஆகிய இதர வசதிகளையும் கொண்டுள்ளது.

இம்மருத்துவமனையில், இயக்குநர் அலுவலகம், செவிலியர் கண்காணிப்பாளர் அலுவலகம், நிர்வாக அலுவலகம், நிலைய மருத்துவ அலுவலகம், கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை ஆகிய நிர்வாகப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மருத்துவமனை சென்னையின் முக்கிய பகுதியில் அமைந்துள்ளதாலும், இந்த மருத்துவமனையில் உள்ள மேம்பட்ட வசதிகளாலும் தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொதுப் பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தொடர்ந்த அவதூறு வழக்கு!

# பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை நேரில் ஆஜராக உத்தரவு!

## சைதாப்பேட்டை நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

சென்னை, ஜூன் 17-

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள், தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீது அவதூறு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் சைதாப்பேட்டை நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்த போது அண்ணாமலை ஜூலை 14ஆம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக அதிரடி உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் டி.ஆர். பாலு சார்பில் வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் ஆஜராகி வாதாடினார். இது பற்றிய விவரம் வருமாறு:

கடந்த மாதம் 14ஆம் தேதி, தி.மு.க.வினர் 12 பேரின் சொத்து பட்டியல் என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அறிக்கை ஒன்றை வெளியிட்டார். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க.வினர் குறித்து பல்வேறு உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளையும் அவர் முன்வைத்தார்.

இதையடுத்து குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து அண்ணாமலைக்கு நோட்டீஸ்கள்



அனுப்பப்பட்டன. ஆனால், தான் தெரிவித்த குற்றச்சாட்டை மறுக்க முடியாது என்றும், வழக்கை எதிர்கொள்ளத் தயார் என்றும் அண்ணாமலை தரப்பில் பதில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அண்ணாமலை மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் கடந்த 10ம் தேதி கிரிமினல் அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு 8 வாரத்துக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவரும், தி.மு.க. பொருளாளருமான டி.ஆர். பாலு, அண்ணாமலைக்கு எதிராக சென்னை சைதாப்பேட்டை 18வது நீதி மன்றத்தில் அவதூறு வழக்கு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:-

1957ம் ஆண்டு முதல் அரசியலில் இருந்து வருகிறேன். எம்.பி.யாகவும், மத்திய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளேன். கட்சியிலும் பல்வேறு பொறுப்புகளை வகித்து வருகிறேன். எனக்கு சமுதாயத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் நற்பெயரும் மரியாதையும் உள்ளது. அதை சீர்குலைக்கும் விதமாக, களங்கம் ஏற்படுத்தும் விதமாக அண்ணாமலை அவதூறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எனக்கு எதிராகச் சுமத்தியுள்ளார்.

எங்கள் குடும்பத்தினர் 21 நிறுவனங்களில் பல கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் அவர் கூறும் நிறுவனங்களில், 3 நிறுவனங்களில் மட்டும் சிறு முதலீடு செய்து உள்ளேன். மற்ற நிறுவனங்களில் பங்குதாரராகவும் இல்லை. பொய்யான குற்றச்சாட்டைக் கூறி எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதற்காக அண்ணாமலை எனக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். இதுதவிர அவர் மீது கிரிமினல் அவதூறு சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து, தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவரும், தி.மு.க. பொருளாளருமான டி.ஆர்.பாலு அண்ணாமலைக்கு எதிராக சென்னை சைதாப்பேட்டை பெருநகர 17வது நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தாக்கல் செய்தார். இந்த மனு மீதான விசாரணை கடந்த சில நாட்களுக்கு முன் மாஜிஸ்திரேட்டு அனிதா ஆனந்த் முன் வந்தது. அப்போது தி.மு.க. பொருளாளர் டி.ஆர். பாலு ஆஜராகி பிரமாண வாக்குமூலம் அளித்தார்.

இந்த நிலையில், திமுக பொருளாளரும், எம்.பி.யுமான டி.ஆர்.பாலு தொடர்ந்த அவதூறு வழக்கில், ஜூலை 14ஆம் தேதி நேரில் ஆஜராக, பாஜக மாநில தலைவர் அண்ணாமலைக்கு சைதாப்பேட்டை நீதி மன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.



திண்டுக்கல் மேற்கு மாவட்டம் நத்தம் சட்டமன்றத் தொகுதி கோட்டையூர் ஒன்றிய குழு உறுப்பினரும் அ.தி.மு.க. வடக்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளருமான சத்தியமூர்த்தி, சாத்தம்பாடி ஒன்றிய குழு உறுப்பினரும் அ.தி.மு.க. தெற்கு ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற செயலாளருமான பழனிச்சாமி, ஆவிச்சிபட்டி ஒன்றிய குழு உறுப்பினர் அம்மாபொன்னு, சிறுகுடி ஒன்றிய குழு உறுப்பினர் சுரேஷ்குமார், புதுப்பட்டி ஒன்றிய குழு உறுப்பினரும் அ.தி.மு.க. வடக்கு ஒன்றிய துணைச் செயலாளருமான இந்திராசெல்வராஜ் மற்றும் முக்கிய நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும் உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். உடன் நத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம், திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் முத்துக்குமாரசாமி, நத்தம் பேரூராட்சி தலைவர் சிக்கந்தர்பாட்ஷா, நத்தம் தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார், நத்தம் வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிசாமி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு

# உதகையில் "பழங்குடியினர் கலை விழா" - ஆ.இராசா எம்.பி.சிறப்புரை!

## அமைச்சர் க.ராமச்சந்திரன் - வாகை சந்திரசேகர் - விஜயா தாயன்பன் பங்கேற்பு!

உதகை, ஜூன் 17 -

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் (கலைப் பண்பாட்டு இயக்கம்) வழங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, 100 பழங்குடியினக் கலைஞர்கள் பங்கு பெறும் 'பழங்குடியினர் கலை விழா" இன்று (17.6.2023 சனிக்கிழமை) காலை 10 மணியளவில் உதகை - பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெறுகிறது.

விழாவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் வரவேற்கிறார்.

மாவட்ட ஆட்சியர் சா.ப.அம்ரீம் தலைமை வகிக்கிறார்.

கலை விழாவினை அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்து உரையாற்றுகிறார்.

விழாவில் ஆ.இராசா எம்.பி., தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் ஆர். கணேஷ் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சித் தலைவர் மு.பொன்தோஸ், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கீர்த்தி பிரியதர்ஷினி, மாவட்ட கருவூல அலுவலர் எம்.சங்கர நாராயணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இவ்விழாவில் பழங்குடியினர் கலை நிகழ்ச்சிகளாக புகிரி இசைக் கருவி வாசித்தல், தோழர் நடனம், இசைக் கருவிகளுடன் கோத்தர் நடனம், இசை கருவிகளுடன் இருளர் நடனம், குனும்பா பாரம்பரிய நடனம், காட்டு நாயக்கர்கள் பாரம்பரிய இசையுடன் நடனம், பளியர் பாரம்பரிய நடனம், முள்ளு குறும்பர் பாரம்பரியக் கோலாட்டம், பெட்டக் குறும்பர் இசையுடன் பாரம்பரிய நடனம் உள்ளிட்டவை நடைபெறுகிறது.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

### அமைச்சர் செந்தில்பாலாஜி கைது!

# ஒன்றிய பா.ஜ.க. அரசு அநாகரிகச் செயலில் ஈடுபடுவதா?

## நீலகிரி மாவட்டக் கழகம் கண்டனம்!

உதகை, ஜூன் 17-

அமைச்சர் செந்தில் பாலாஜியை அநாகரிக முறையில் கைது செய்ததற்கு நீலகிரி மாவட்டக் கழகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள திமுக மாவட்ட ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கூட்டம், உதகை ஆனந்தகிரி கூட்ட அரங்கில் மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளங்கோவன், மாவட்ட ஊராட்சி தலைவர் பொன்தோஸ், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, பரமசிவன், காமராஜ், லாரன்ஸ், பிரேம்குமார், நெல்லை கண்ணன், பீமன், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், இளஞ்செழியன் பாபு, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத்துல்லா, தொரை, ஷீலா கேத்ரின், ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், சதீஷ்குமார், நடராஜன், சுந்தரராஜ், முத்து, சின்னவர், ரமேஸ்குமார், சஞ்சீவ்குமார், காளிதாஸ், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ராம்குமார், சுனிதா, கீர்த்தனா, மாயன், நகராட்சி தலைவர்கள்துணை தலைவர்கள் வாணீஸ்வரி, ஷீலா கேத்ரின், பரிமளா, சிவகாமி, நாகராஜ், பேரூராட்சி தலைவர்கள்துணை தலைவர்கள் கலியமூர்த்தி, ஜெயகுமாரி, கௌரி, சித்ராதேவி, ஹேமமாலினி, சத்தியவாணி, வள்ளி, ராதா, பேபி, பங்கஜம், உமாநாத், ரமேஷ்குமார், செல்வம், விக்டர், நாகேஸ்வரி உட்பட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது அது வருமாறு:

முத்தமிழ் அறிஞர் தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் அந்தந்த கழக அமைப்புகளுடன் இணைந்து வெகு சிறப்பாக கொண்டாடுவது,

கழக தலைவர் தளபதி அவர்கள் அறிவிப்பின்படி, கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு பணியினை உள்ளாட்சி பிரதிநிதிகள் தாங்கள் தங்கள் பகுதிகளில் துரித படுத்துவது,

பா.ஜ.க அரசு அமைந்தது முதல் நாட்டில், தங்களுக்கு எதிரான அரசியல் கட்சியினரை பழிவாங்கும் நடவடிக்கைகள் மூலம் ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

பா.ஜ.க. அரசின் இத்தகைய செயல்களுக்கு, ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் கழக தலைவர் தளபதி அவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்திருந்தார்கள்.

தங்கள் வசம் உள்ள விசாரணை அதிகார அமைப்புகளை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி அநாகரிக அரசியலில் ஈடுபடுவது தவிர்த்து பா.ஜ.க.,வினருக்கு வேறொன்றும் தெரியாது.

இந்நிலையில், நேற்றைக்கு முன்தினம் காலை முதல் அமலாக்கத்துறையினர், மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் இல்லத்தில் சோதனை மேர்கொண்டு, நாட்டின் கோப்புகள் பாதுகாக்கப்படும் தலைமை செயலகத்திலும் அத்துமீறி புகுந்து சோதனை நடத்தியுள்ளது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தந்திருந்த நிலையில் நேற்று நள்ளிரவில் மின்சாரத்துறை அமைச்சரை கைது செய்வதாக கூறி, இருதய அடைப்பு ஏற்படும் அளவிற்கு நெருக்கடி தந்து அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மன ரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிப்படைய செய்திருப்பது தெளிவாக தெரிகிறது.

விசாரணைக்கு எவ்வித தயக்கமுமின்றி ஒத்துழைப்பு தருகிறேன் என்று சொன்ன பிறகும் இந்த வழக்கிற்குத் தேவையான சட்ட நடைமுறைகளை மீறி அமலாக்கத்துறை அதிகாரிகள் இவ்வளவு மனித நேயமற்ற முறையில் நடந்து கொண்டிருப்பது கண்டனத்திற்குரியது. இந்த ஜனநாயக படுகொலை செயலுக்கு அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் கண்டனங்களை தெரிவித்து, தளபதி அவர்களுக்கு பெரும் ஆதரவை அளித்துள்ளார்கள்.

மத்தியில் ஆளும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு செயல்படும் பா.ஜ.க., அரசின் இத்தகைய செயல்களுக்கு நீலகிரி மாவட்ட தி.மு.க. கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், 2024 நாடாளுமன்ற தேர்தலில் படுதோல்வியடைய இத்தகைய வெறுப்பு அரசியலை கையில் எடுத்துள்ள ஒன்றிய பா.ஜ.க., அரசிற்கு எதிர்வரும் 2024 தேர்தலில் நாட்டு மக்கள் தக்க பாடத்தினை கற்பிக்க வேண்டும் எனவும் நீலகிரி மாவட்ட திமுக கேட்டுக்கொள்கிறது.

கூட்ட முடிவில் குன்னூர் நகர செயலாளர் ராமசாமி நன்றி கூறினார்.